**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 335/2022**

**Deposition of Witnesses for PW2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தினகரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.08.2025

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் உத்திரகோசமங்கை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.11.2020ம் தேதி கீழக்கரை காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்தபோது 15.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ரமேஷ் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் நான், த.கா.ரமேஷ் மற்றும் தகவலாளி உடன் கீழக்கரை பழைய பேருந்து நிலையம் அருகில் AMS பெட்ரோல் பங்க் பின்புறம் கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு சந்கேத்திற்கு இடமான நின்றவரை கண்காணித்து வந்தபோது போலீஸ் பார்ட்டியை கண்டதும் தப்பித்து ஓட முயன்றவரை தகவலாளி காட்டிவிட்டு மறைந்தவுடன் நாங்கள் அந்த இடத்தில் இருந்து ஓட முயன்றவரை வளைத்து பிடித்து சார்பு ஆய்வாளர் விசாரிக்க தன்னுடைய பெயர் சாகுல் ஹமீது, வயது 43, த/பெ.நல்ல இப்ராஹிம், ஜின்னா தெரு, கீழக்கரை என கூறினார். மேற்படி நபரிடம் உம்மிடம் உள்ள பையில் கஞ்சா எனும் போதை பொருள் இருப்பதாக நம்பகதனமான தகவல் உள்ளது. எனவே உன்னுடைய கையில் வைத்திருந்த பையை சோதனை செய்ய வேண்டும் என்றால் நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியின் முன்பாகவோ அழைத்து சென்று சோதனை செய்ய உரிமை வேண்டும் தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதன்பேரில் சோதனை சம்மத கடிதத்தில் எதிரி மற்றும் சாட்சிகளாக நானும்,

த.கா.ரமேஷ் ஆகியோர் கையெழுத்து செய்தோம். அ.த.சா.ஆ,1ல் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பின்பு எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் உலர்ந்த நிலையில் உள்ள இலை, தழைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது. அருகிலுள்ள பேக்கரியில் இருந்து தராசு வாங்கி வர சொல்லி, கஞ்சாவை எடை போட்டு பார்த்தபோது, அதில் 1.200 கிகி கஞ்சா இருந்தது. அதில் பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் எடுத்து, பாலிதீன் கவரில் வைத்து, காக்கி கவரில் மடித்து, SHO சீல் வைத்தும், S1,S2 என குறியீடு செய்தும், மீதமுள்ள 1.100 கிகி கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் வைத்து கட்டி, SHO சீல் வைத்தும், எதிரி முகவரியுடன் கூடிய அத்தாட்சி விவர லேபிள் தயார் செய்து, ஒட்டி அதில் எதிரி மற்றும் சாட்சிகளாக நானும், த.கா.ரமேஷ் ஆகியோர் கையெழுத்து செய்தோம். ஆய்வாளர் தயார் செய்த அத்தாட்சியில் சாட்சிகளாக நானும், த.கா.ரமேஷ் ஆகியோர் கையெழுத்து செய்தோம். பின்பு 15.45 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 16.00 மணிக்கு கீழக்கரை கா.நி.கு.எண்.355/2020 பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) NPDS Act- ஆக வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கில் தகவல் கிடைத்தவுடன் விஏஓ, தலையாரியை அழைத்து கொண்டு சம்பவம் இடம் செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு தனி நபர் சாட்சிகள் வந்தார்களா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகஜர், சோதனை சம்மத கடிதம் ஆகியவை கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. அதனை கணினியில் தட்டச்சு செய்தவர் CCTNS காவலர் ஆவார். அவர் பெயர் காவலர் துரைமுருகன் ஆவார். துரை முருகன் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர், சோதனை சம்மத கடிதம் எங்கு வைத்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது. சாம்பிலில் ஒட்டப்பட்ட சிலிப்புகளில் கு.எண்., சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்படி சாம்பில்களில் உள்ள போட்டோக்களில் S1,S2 என குறியீடு செய்யப்படவில்லை என்றால் உள்ளது. நான் சொல்வது போல் S1,S2 என

குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மீதமுள்ள சா.பொ.3 சான்றுப்பொருட்களில் லேபில் மற்றும் சிலிப்புகளில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். கீழக்கரையில் உள்ள அய்யங்கார் பேக்கரியில் தராசு வாங்கி வந்தோம். அந்த கடைக்காரை நாங்கள் இந்த வழக்கில் சாட்சியாக கையொப்பம் போடவில்லை. என்னை ஆய்வாளர் விசாரணையின்போது அய்யங்கார் பேக்கரியில் தராசு வாங்கி வந்த விவரங்களை சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும், சார்பு ஆய்வாளருடன் ரைடுக்கு செல்லவில்லை என்றும், எதிரியிடம் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும், வழக்கு சொத்திற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி யாரும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி வீட்டில் இருந்த நபரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து சென்று பொய்யாக இந்த வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கணிங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 335/2022**

**Deposition of Witnesses for PW3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரமேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.08.2025

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் கமுதி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று ராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 29.11.2020ம் தேதி கீழக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது ரகசிய தகவலாளி நிலையம் ஆஜராகி சொன்ன ரகசிய தகவலின் பேரில் 15.00 மணிக்கு காவலர் தினகரன், த.கா.ரமேஷ், மடிகணினி காவலர் சந்திரசேகர் மற்றும் தகவலாளி உடன் கீழக்கரை பழைய பேருந்து நிலையம் அருகில் AMS பெட்ரோல் பங்க் பின்புறம் கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு சந்கேத்திற்கு இடமான நின்றவரை கண்காணித்து வந்தபோது போலீஸ் பார்ட்டியை கண்டதும் தப்பித்து ஓட முயன்றவரை தகவலாளி காட்டிவிட்டு மறைந்தவுடன் நாங்கள் அந்த இடத்தில் இருந்து ஓட முயன்றவரை வளைத்து பிடித்து நான் விசாரிக்க தன்னுடைய பெயர் சாகுல் ஹமீது, வயது 43, த/பெ.நல்ல இப்ராஹிம், ஜின்னா தெரு, கீழக்கரை என கூறினார். மேற்படி நபரிடம் உம்மிடம் உள்ள பையில் கஞ்சா எனும் போதை பொருள் இருப்பதாக நம்பகதனமான தகவல் உள்ளது. எனவே உன்னுடைய கையில் வைத்திருந்த பையை சோதனை செய்ய வேண்டும் என்றால் நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியின் முன்பாகவோ அழைத்து சென்று சோதனை செய்ய உரிமை வேண்டும் தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதன்பேரில் சோதனை சம்மத கடிதத்தில் எதிரி மற்றும்

சாட்சிகள் காவலர் தினகரன், த.கா.ரமேஷ் ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். பின்பு எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் உலர்ந்த நிலையில் உள்ள இலை, தழைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது. அருகிலுள்ள பேக்கரியில் இருந்து தராசு வாங்கி வர சொல்லி, கஞ்சாவை எடை போட்டு பார்த்தபோது, அதில் 1.200 கிகி கஞ்சா இருந்தது. அதில் பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் எடுத்து, பாலிதீன் கவரில் வைத்து, காக்கி கவரில் மடித்து, SHO சீல் வைத்தும், S1,S2 என குறியீடு செய்தும், மீதமுள்ள 1.100 கிகி கஞ்சாவை அதே பாலிதீன் கவரில் வைத்து கட்டி, SHO சீல் வைத்தும், எதிரி முகவரியுடன் கூடிய அத்தாட்சி விவர லேபிள் தயார் செய்து, ஒட்டி அதில் எதிரி மற்றும் சாட்சிகளாக காவலர் தினகரன், த.கா.ரமேஷ் ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். நான் தயார் செய்த அத்தாட்சியில் சாட்சிகளாக காவலர் தினகரன், த.கா.ரமேஷ் ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். பின்பு 15.45 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 16.00 மணிக்கு கீழக்கரை கா.நி.கு.எண்.355/2020 பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) NPDS Act- ஆக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தனி அறிக்கை தயார் செய்து கீழக்கரை வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். தனி அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர், ராமநாதபுரத்திற்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கில் தகவல் கிடைத்தவுடன் விஏஓ, தலையாரியை அழைத்து கொண்டு சம்பவம் இடம் செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு தனி நபர் சாட்சிகள் வந்தார்களா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகஜர், சோதனை சம்மத கடிதம் ஆகியவை கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. அதனை கணினியில் தட்டச்சு செய்தவர் CCTNS காவலர் ஆவார். அவர் பெயர் காவலர் துரைமுருகன் ஆவார். துரை முருகன், சந்திரசேகரனும் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. கையெழுத்து வாங்கினோம். கைது குறிப்பாணை

சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தோம். கைது குறிப்பாணையில் எதிரியிடமிருந்து எந்த பொருள் கைப்பற்றினோம் என்ற குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி கைது குறிப்பாணையில் கு.எண்., சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கைப்பற்றுதல் மகஜர், சோதனை சம்மத கடிதம், பிரிவு 57 படியான அறிக்கை ஆகியவை எங்கு வைத்து டைப் செய்யப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து டைப் செய்யப்பட்டது. எங்கு வைத்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து எடுக்கப்பட்டது. பெட்ரோல் பங்கில் வேலை பார்கும் நபர்களை சாட்சிகளாக அழைத்தோம் வரவில்லை. அவர் பெயர், விலாசம் குறித்து கொள்ளவில்லை. தனி அறிக்கையில் ஆய்வாளரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி தனி அறிக்கை ஆய்வாளரிடம் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. சாம்பிலில் ஒட்டப்பட்ட சிலிப்புகளில் கு.எண்., சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்படி சாம்பில்களில் உள்ள போட்டோக்களில் S1,S2 என குறியீடு செய்யப்படவில்லை என்றால் உள்ளது. நான் சொல்வது போல் S1,S2 என குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மீதமுள்ள சா.பொ.3 சான்றுப்பொருட்களில் லேபில் மற்றும் சிலிப்புகளில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். கீழக்கரையில் உள்ள அய்யங்கார் பேக்கரியில் தராசு வாங்கி வந்தோம். அந்த கடைக்காரை நாங்கள் இந்த வழக்கில் சாட்சியாக கையொப்பம் போடவில்லை. என்னை ஆய்வாளர் விசாரணையின்போது அய்யங்கார் பேக்கரியில் தராசு வாங்கி வந்த விவரங்களை சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும், சார்பு ஆய்வாளருடன் ரைடுக்கு செல்லவில்லை என்றும், எதிரியிடம் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும், வழக்கு சொத்திற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி யாரும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி வீட்டில் இருந்த நபரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து சென்று பொய்யாக இந்த வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயரதிகாரிகள்

கேட்டுக்கொண்டதற்கணிங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.